## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.411/2018 பி.வா.சா.1 தங்கவேல்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 17.03.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) என் பூமிக்கும் வாதி பூமிக்கும் வடக்கில் பிரதான தார் சாலை உள்ளது என்றால் சரிதான். வாதியின் பூமியின் தென் கிழக்கு மூலையில் வாதியின் வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். வாதி பூமியை ஒட்டி கிழபுறமாக என் பூமி உள்ளது என்றால் சரிதான். என் பூமி எனக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் என் தந்தை வழியாக எனக்கு பாத்தியப்பட்டது. என் பூமியின் பரப்பளவு என்ன என்றால் 10 ஏக்கர் ஆகும். அந்த 10 ஏக்கர் முழுமையும் என் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான்.

2) என் பூமியில் என் வீடு எப்பகுதியில் உள்ளது என்றால் என் பூமியின் நடுவில் உள்ளது. நீதிமன்ற ஆணையர் அளவையருடன் அளந்த போது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். நில அளவையர் கொண்டு அளக்க நான் தான் மனு செய்தேன் என்றால் சரிதான். நீ.சா.ஆ. 4 வரைபடத்தில் மனுதாரர் வீடாக காட்டப்பட்டுள்ளது தான் என் வீடு என்றால் சரிதான். வாதியின் வீட்டிற்கு கிழபுறம் உள்ள வீடு யார் உடையது என்றால் அவ்வாறு வீடு உள்ளது அது யாருடையது என எனக்கு தெரியாது.

3) வாதி வீட்டிற்கு தென்புறம் உள்ள பூமி யாருடையது என்றால் வாதியின் சித்தப்பா , பெரியப்பா பூமி ஆகும். எனது 10 ஏக்கர் பூமிக்கான உரிமைமூல ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்து உள்ளேன். வாதி பூமி ஒட்டி வடபுறத்தில் கம்பி வேலி

அமைந்துள்ளது என்றால் சரிதான். வாதி தன் வீட்டை அடைய வழக்கு தடத்தை தான் பயன்படுத்த வேண்டும் என்றால் சரியல்ல. அந்த தடமானது எனது பட்டா பூமியில் உள்ளது.

4) என் பூமியின் புல எண் என்ன என்றால் 227/1B மற்றும் 7 காலைகள் உள்ளன. வாதி பூமி புல எண் 227/1A1, 227/1A2 என்றால் சரிதான். நீ.சா.ஆ. 3 அறிக்கைக்கு எனக்கு ஆட்சேபணை ஏதும் இல்லை என்றால் சரியல்ல. நான் ஆட்சேபணை ஏதும் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் தாக்கல் செய்து உள்ளேன். வழக்கு தடம் நீ.சா.ஆ. 3 அறிக்கையில் புல எண் 227/1A1 ல் அமைந்துள்ளதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீ.சா.ஆ. 3 அறிக்கையில் என் வீட்டிற்கு வேறு தடம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) வழக்கு தடம் வாதி வீட்டை கடந்து வாதி சித்தப்பா , பெரியப்பா பூமி வரை செல்கிறது என்றால் என் பூமியின் இறுதி வரை செல்கிறது. வழக்கு தடம் புல எண். 227/1B இறுதி வரை செல்கிறதா என்றால் செல்கிறது. என் பூமியில் கிணறு எங்கு உள்ளது என்றால் தென் கோட்டில் உள்ளது. வழக்கு தடம் என் கிணறு வரை செல்லாது என்றால் சரிதான். கிணறுக்கு 50 அடி முன்பே நின்றுவிடும். புல எண். 227/1A6, 2A, 2B ஆகியவை என் பூமிகள் என்றால் சரிதான். புல எண். 227/1A6, 2A கிழபுறம் தடம் இல்லை என்றால் அதில் பாதி வரை தடம் வரும். வழக்கு தடம் அங்கு வராது.

6) வழக்கு தடம் புல எண். புல எண். 227/1A4 லேயே நின்று விடும் என்றும் புல எண். 227/1A6 வரை செல்லாது என்றும் சொன்னால் அந்த புல எண்கள் எனக்கு தெரியாது. வழக்கு தடம் மற்றும் என்னுடைய வீட்டு தடம் தவிர அங்கு வேறு தடங்கள் இல்லை என்றால் சரிதான். என் பூமியும் வாதி பூமியும் வாதி பங்காளி பூமியும் தென்னந்தோப்புக்கள் என்றால் சரிதான். என் பூமி வடக்கு சரிவு என்றால் இல்லை . அது தெற்கு சரிவு ஆகும். வடக்கு எல்லையில் உள்ள சாலைக்கு என் பூமி 3 அடி தாழ்வாக இருக்கும் என்றால் 11/2 அடி சரிவாக இறங்கும். மேற்படி

சாலையும் வழக்கு தடமும் ஒரே உயரத்தில் உள்ளது என்றால் சரியல்ல. தடமும் சரிவாக தான் இருக்கும்.

7 ) நீ.சா.ஆ. 3 அறிக்கையில் என் பூமி தாழ்வாக இருப்பதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அதற்கு எதிராக நான் ஆட்சேபணை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தடம் வாதியின் புல எண் 227/1A1, புல எண் 227/1A2 பூமியில் அமைந்துள்ளது என்றும் அது வாதி மற்றும் வாதி பங்காளிகளுக்கு பாத்தியப்பட்டுள்ளது என்றும் அது என் பூமியை விட உயரமான பகுதியில் அமைந்துள்ளது என்றும் அதனை அபகரிக்கவே நான் வாதியுடன் பிரச்சனை செய்து வருகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் வாதி மீது கொடுத்த போலீஸ் புகார்கள் பொய்யானவை என்றால் சரியல்ல. விதவையான வாதியை மிரட்டி அவரது சொத்தை அபகரிக்க முயல்கிறேன் என்றால் சரியல்ல.

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**ஒப்பம் /- (மு.ச. ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி